**Arimaa Nokku Journal** **ISSN: 2320-4842**
**(UGC Care Group-I Journal)** **Vol-18 No. 03 July-September 2024**

# "காகம் கிராமம் அருள்மிகு இராவுத்தகுமாரசாமி திருக்கோயில் திருவிழாவும் நம்பிக்கைகளும்"

**கு.தங்கமணி**
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை
நவரசம் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி அறச்சலூர்
ஈரோடு-638101

**ஆய்வு நோக்கம்:**

இன்றைய கால ஆய்வுகளில் 'நாட்டுப்புறவியல்' தனித்துறையாக வளர்ச்சி பெற்று விளங்குகிறது. அவ்வகையில் பழமையான வழிபாட்டு முறைகள் குறித்து ஆய்வு செய்தால் முன்னோர் வந்த பாதையை அறிந்து கொள்ளலாம். இது மக்கட் சமுதாயத்திற்கு உயர்வளிக்கும் என்ற நோக்கத்துடனும் இதன் மூலமாக மக்களுக்கு தெய்வ நம்பிக்கையின் ஆழ்ந்த உணர்வை வெளிப்படுத்த முடியும் என்பதற்காகவும் இக்கோயில் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

ஈரோடு மாவட்டம் காகம் கிராமம் இராவுத்தகுமாரசாமி கோயில் தனித்துவமான சிறப்பு வாய்ந்தது. குழந்தை பருவம் முதல் யான் கண்ட கோயில்களில் மாற்று மதத்தவரைக் குலதெய்வமாக ஏற்று வழிபடும் தனித்துவமான வழிபாட்டு முறை ஆவலை ஏற்படுத்தியதன் காரணமாக இந்தத் தலைப்பு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்து இசுலாமிய ஒற்றுமையை உணர்த்தும் விதமாகத் இத்திருக்கோயில் அமைந்துள்ளது

**முன்னுரை**

கொங்கு நாட்டு திருக்கோயில்களுள் ஈரோடு மாவட்டம் காகம் கிராமம் இராவுத்தகுமாரசாமி கோயிலும் ஒன்று. இங்கு எழுந்தருளியுள்ள இராவுத்தகுமாரசாமி தம்மை நாடி வந்த அனைத்து மக்களுக்கும் மனத்துன்பம் நீக்கி வீரம் தந்து அருள்புரிகின்றார்.

மக்களின் உணர்வுகளோடு ஒன்றுபட்டு விளங்கும் குலதெய்வ கோயில்கள் தலவரலாறுகளின் மூலமும் நாட்டுப்புறப் பாடல்களின் வழியாகவும் மிகச்சிறப்பு பெற்று விளங்குகின்றன. அவ்வகையில் இக்கோயிலின் வழிபாட்டு முறையினை பற்றி அறிந்துகொள்ள இவ்வாய்வு பெருந்துணைப் புரியும்.

**இராவுத்தகுமாரசாமி கோயில் திருவிழாவும் நம்பிக்கைகளும்**

தெய்வங்களுக்கு பொங்கல் மற்றும் திருவிழாக்கள் நடத்துவதன் மூலம் அந்த ஆண்டு மழை வளம் குறையாது பொழிந்து விளைச்சல் பெருகி நன்மையே நடக்கும் என்றும் தீமை எதுவும் அணுகாது என்றும் கால்நடைகளுக்கு நோய் ஏற்படாமல், கால்நடைகள் விருத்தியாகும் என்றும் குடும்பத்தில் நன்மை ஏற்படும் என்றும், மேலும் இறைவன் தங்களை பாதுகாப்பதால் இறைவனுக்கு தன் நன்றியை செலுத்தும் விதமாகவும் திருவிழாக்கள் நடத்தப் பெறுகின்றது.

திருவிழாக்கள் '**மக்களிடையே ஓர் ஒற்றுமையையும் உளமார்ந்த அன்பையும், நல்லது செய்ய வேண்டும் என்ற நட்புணர்ச்சியையும், அல்லது செய்யின் அவலமே மிஞ்சும் என்ற அச்ச உணர்ச்சியையும், இத்தேவதை வழிபாடுகள் ஏற்படுத்தியிருக்கின்றன. சமுதாய கூட்டுறவும் கலைகளின் வளர்ச்சிக்கும், இத்தேவதை விழாக்கள் வழி சமைக்கின்றன**.' என்று நாட்டுப்புறவியல் பேரறிஞர் சு.சண்முகசுந்தரம் அவர்கள் தன் ''நாட்டுப்புற இயல்'' என்ற நூலில் கூறியுள்ளார்.

**இராவுத்த குமாரசாமி கோயில் பொங்கல் திருவிழா**:

குலதெய்வமாக விளங்குவது இராவுத்த குமாராசாமி திருக்கோயில் ஆகும். குலதெய்வம் சிறப்புடன் அருளினால் குலம் நன்றாக வாழும்.

**''பண்டம்பாடி பட்டி பெருகினால்**
**குலமக்கள் வம்சம் பெருகும்!**
**குலமக்கள் வம்சம் பெருகினால்**
**நீதிநேர்மை வாய்மைநிலைக்கும்!**
**நீதிநேர்மை வாய்மைநிலைத்தால்**
**மாரி தவறாமல் பொழிந்திடும்!**
**மாரி தவறாமல் பொழிந்தால்**
**வெள்ளாண்மை செழித்து வளரும்!**
**வெள்ளாண்மை செழித்து வளர்ந்தால்**
**மக்கள்நலம் வளம் பெருகும்!**
**மக்கள்நலம் வளம் பெருகினால்**
**தொழில் வளம் பெருகி வளரும்!**
**தொழில் வளம் பெருகி வளர்ந்தால்**
**நாடுவளம் பெற்று செழிக்கும்!**
**நாடுவளம் பெற்று செழித்தால்**
**வையகமே சிறப்புற்று இருக்கும்!**

என்று குலதெய்வ வழிபாடு பற்றியும், அதன் பயன் பற்றியும் குறிப்பிடப்பட்டு உள்ளது.

**கோயில் தெய்வங்கள்:**

கோயில் கருவறையில் பச்சைத் துலுக்கர் மற்றும் பட்டாணி ராவுத்தர் ஆகிய இசுலாமிய தெய்வங்களின் வேங்கை மரத்தினாலான சிலையும் முருகர் ஆகிய குமாரசாமியின் சிலையும் இடம் பெற்றுள்ளது. கோயிலின் மேற்புறம் ஒரு பக்கம் கோபுரம் போன்ற அமைப்பினையும் ஒரு பக்கம் மசூதி அமைப்பினையும் கொண்டுள்ளது.

**.பொங்கல் விழா:**

''அருள்மிகு இராவுத்தகுமாரசாமி திருக்கோயிலில்'' மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை பொங்கல் திருவிழா நடைபெறும்.

**புற்றுமண் எடுத்து வருதல்:**

பொங்கலுக்கு பத்து நாளுக்கு முன்பு புற்றுமண் எடுத்து வந்து பச்சை துலுக்கர் உருவம் செய்வர்.

புற்றுமண் எடுத்து வருதல் காணியாளர் திருப்பணி ஆகும். ஆனால் உரு செய்தல் உடையார் இனத்தவர் பணியாகும். உடையார் இனத்தவர் புற்று மண்ணால் பச்சைத் துலுக்கர் உருவம் செய்வர்.

**பூச்சாட்டுதல்:**

அருள்மிகு இராவுத்த குமாரசாமி திருக்கோயிலில் வைகாசி மாதம் பொங்கல் திருவிழா நடைபெறும்.வைகாசி மாதம் செவ்வாய்கிழமை பூச்சாட்டுதல் நடைபெறும். 3 நாள் சாட்டுதல் இராவுத்த குமாரசாமி கோயிலில் நடைபெறுகிறது.

**தீர்த்தம்:**

செவ்வாய்கிழமை இரவு தீத்தம் காவிரியில் இருந்து எடுத்து வரப்படுகிறது.

**அம்மை அழைத்தல்:**

கொளத்துபாளையத்தில் இருந்து அம்மை அழைத்து வரப்படுகிறது.

**குதிரை துலுக்கு பிடித்தல்:**

அம்மை அழைத்து வந்தவுடன் குதிரையை துலுக்கு பிடிக்கின்றனர்.

**இசைக்கருவி:**

அருள்மிகு இராவுத்தகுமாரசாமி திருக்கோயிலில் பம்பை இசைக்கருவி மட்டுமே இசைக்கிறது.

**பொங்கல் வைத்தல்:**

வியாழக்கிழமை மதியம் 12:00 – 1:00 மணியளவில் பொங்கல் வைக்கப்படுகின்றது. பொங்கலை கோயிலில் வைக்க வேண்டும். வீடுகளில் பொங்கல் வைத்து கொண்டு வரும் வழக்கமில்லை. பொங்கல் வைக்க தேவையான அடுப்பை மணலால் நாயக்கர் இனத்தவர் கோயிலில் கட்டி கொடுப்பர். மாவிளக்கு கொண்டு வரும் வழக்கம் இல்லை.

**பச்சைத்துலுக்கர்:**

இராவுத்தமார் நீங்கா துயில் கொள்ளும் இடத்தில் புற்று மண்ணில் செய்த பச்சைத் துலுக்கர் உருவம் வைக்கப்படும்.

**கரும்பு பந்தல்:**

பச்சைத்துலுக்கர் உருவத்திற்கு மேல் கரும்பாலான பந்தல் போடுவர். இந்த கரும்பு போடும் முறைமை கொந்தளம் மற்றும் வள்ளிபுரம் கருக்கம்பாளையம் காணியாளர்களைச் சார்ந்ததாகும்.

**பச்சைத்துலுக்கர் பூசை:**

- கரும்பால் பச்சைத் துலுக்கருக்கு பந்தல் போட்ட பிறகு பூவால் அலங்காரம் செய்வர்.

- மது மற்றும் கஞ்சா வைத்து பச்சைத் துலுக்கருக்கு பூசை செய்வர்.

**கிடா வெட்டுதல்:**

- வியாழன் இரவு முதலில் பூசாரியார்களது கிடாயை துலுக்கு பிடிப்பர்.
- பூசாரியார் கிடாய் துலுக்கியவுடன் ஏனையோர் கிடாயை துலுக்கு பிடிப்பர்.
- பின்னர் வெள்ளி அதிகாலை சுமார் 2.00 – 3.00 மணியளவில் கிடாய் வெட்டுவர்.

**சுடுவான் சுடுதல்:**

கிடாய் வெட்டிய பிறகு கிடாய் ஈரலை எடுத்து குட்டு (சுடுவான் சுடுதல்) பச்சைத் துலுக்கருக்கு வைத்து பூசை செய்வர்.பின்னர் வெட்டிய கிடாயை அவரவர் இல்லத்துக்கு எடுத்து செல்வர்

**மறுபூசை:**

வெள்ளிக்கிழமை மதியம் மறபூசை செய்வர். மறுபூசை முடிந்தவுடன் பச்சைத் துலுக்கர் உருவை கோயில் கிணற்றில் விடுவர்.

**நம்பிக்கை:**

**“நம்பிக்கையினையே தம் வாழ்வில் பற்றுகோடாகக் கொண்டு எங்கெங்கோ மூலை முடுக்குகளில் எண்ணற்ற நாடோடி மக்கள் அன்று மட்டுமின்றி இன்றும் நாடுதொறும் வாழ்ந்து வருகின்றார்கள்”** என்று பேரா.அ.மு.பரமசிவனாந்தம் குறித்து கூறியுள்ளார்.

அந்த வகையில் இராவுத்தகுமாரசாமி திருக்கோயிலுக்கு வரும் மக்கள் மத்தியில் நிலவும் நம்பிக்கைகள் கீழ்காணுமாறு:

**எந்திரம்:**

இராவுத்த குமாரசாமி திருக்கோயிலில் வழங்கப் பெறும் எந்திரத்தை கட்டுவதால் எந்த தீங்கும் அணுகாது என்பர்.

இராவுத்த குமாரசாமியை வேண்டி நேர்த்திக் கடன் செய்தால் பயன் என்று எண்ணி தாங்கள் விரும்பியவற்றை இராவுத்த குமாரசாமிக்கு நேர்த்திக் கடனாக செய்து வழிபட்டு வருகின்றனர்.

**மொட்டையடித்தல்:**

மொட்டையடித்தல் என்பது எல்லா கோயில்களிலும் பொதுவாக காணப்படும் நம்பிக்கையாகும். மொட்டையடித்தல் என்னும் நம்பிக்கை இராவுத்த குமாரசாமி திருக்கோயிலிலும் காணப்படுகிறது.

**அறிவியல் ரீதியலான காரணம்:**

கரு தோன்றி, வளர்ச்சி பெற்று குழந்தை பிறக்கும் வரை தாயின் கருவறையில் பத்து மாதம் பனிக்குடத்தில் இருக்கும். குழந்தை பிறந்தவுடன் பனிக்குடத்தில் உள்ள கழிவுகள் அனைத்தும் குழந்தை மேல் இருக்கும். அதனை பிறந்தவுடன் சுத்தம் செய்வர்.

ஆனால் தலையில் உள்ள கழிவுகள் யாவும் மொட்டையடிக்கும் போது மட்டுமே உரோமக் கால்கள் வழியாக வெளியேறும். இதனால் தலைவலி வருவது தடுக்கப்படுகிறது என்று அறிவியல் காரணம் மொட்டையடித்தலின் பயன் பற்றி கூறப்படுகிறது.

பொங்கல் மற்றும் சிறப்பு நாள்களில் மக்கள் வேண்டுதலாக முடிக்காணிக்கையாக மொட்டையடித்தல் சடங்கை செய்யும் நம்பிக்கை காணப்படுகிறது.

**உரு செய்து வைத்தல்:**

ஏதேனும் வேண்டிக் கொண்டு அது நிறைவேறினால் உரு செய்து இராவுத்த குமாரசாமி கோயிலில் அந்த ஆண்டு பொங்கல் வைக்கும் வழக்கம் காணப்படுகிறது.

**சான்று:**

மாட்டிற்கு உடல் நலம் சரியில்லாத போது உடல்நலம் சரியாக வேண்டும் என்று வேண்டிக் கொண்டால் மாட்டின் உருவம் செய்து வைப்பர்.

குழந்தை பேறு கிட்ட வேண்டும் என வேண்டிக் கொண்டு குழந்தை பிறந்தால் குழந்தை உருவம் செய்து வைப்பர்.

**உருவிற்கு கண் திறத்தல்:**

வேண்டிக் கொள்பவர் குலாளரிடம் கூறியவுடன் குலாலளர் உரு செய்து கோயிலில் வைத்து தேங்காய், பழம், வெற்றிலைப் பாக்கு வைத்து பூசை செய்து கண் உருவத்தை உருவின் கண் வரைந்து கண்திறப்பர்.

**பூ கேட்டல்:**

திங்கள் மற்றும் வெள்ளிக்கிழமை, பூசை நடைபெறும் சிறப்பு நாளிகளில் பூசை முடிந்த பின் பூச்சகுனம் கேட்கின்றனர். பூ கேட்ட பின்பே அச்செயலை தொடங்குகின்றனர்.

திருமணம், நிலம் வாங்குதல், வீடு கட்டுதல், தொழில் தொடங்குதல் முதலிய நற்காரியங்களுக்கு சிவப்பு பூ கேட்கின்றனர்.

உடல் நோய் தீருதல், சிக்கல் தீருதல் முதலியவற்றுக்கு வெள்ளைப் பூ கேட்கின்றனர்.

**நேர்த்திக் கடன் செலுத்துதல்:**

மண்ணால் குதிரை மற்றும் வேல் வாங்கி வைத்தல் போன்றவற்றை நேர்த்தி கடனாக செலுத்துகின்றனர்.

**துகில் எடுத்து போடுதல்:**

துகில் என்பதற்கு ஆடை என்பது பொருளாகும். இராவுத்த குமாரசாமியிடம் ஏதாவது வேண்டிக் கொண்டு ஆடை எடுத்து இராவுத்த குமாரசாமிக்கு போடுவதன் மூலம் வேண்டுதல்கள் நிறைவேறும் என்ற நம்பிக்கை நிலவி வருகின்றது.

**காணியாளர்கள் வழக்கம்.:**

இராவுத்த குமாரசாமியை வணங்கும் காணியாளர்கள் ஆண் பிள்ளைகளுக்கு அதிக முக்கியத்துவம் தருகின்றனர்.

பிராசதத்தை முதலில் ஆண் பிள்ளைகளுக்கே தருகின்றனர்.

மேலும் கிடா வெட்டுதல் போன்ற நிகழ்வுகளில் முதலில் தாங்கள் சாப்பிட்டு விட்டு தான் உறவுக்காரர்களுக்கு விருந்து கொடுக்கும் வழக்கம் காணப்படுகிறது.

**பழம் மாத்து:**

அனைத்து கோயில்களிலம் குலக் காணியாளர்கள் திருமணம் முடிந்தவுடன் கல்யாணப் படி கொண்டு செல்லுதல் வழக்கமாக நடைபெறுவது ஆகும். அது இராவுத்த குமாரசாமி கோயிலில் இயல்பாக நடைபெறுவது ஆகும்.

ஆனால் திருமணத்திற்கு முன்பு இராவுத்த குமாரசாமிக்கு முன் ‘ **பழம் மாத்துதல்**’ சடங்கு என்பதை செய்கின்றனர்.

தேங்காய், பழம் முதலியவற்றை கொண்டு சென்று கோயிலில் வைத்து வழிபாடு செய்த பின்பு தான் திருமணச் சடங்குகளை தொடங்குவர். இதற்கு பழம் மாத்துதல் என்று பெயர்.

**முடிவுரை:**

ஆதிகாலம் தொட்டு இன்று வரை நம்பிக்கையே மனிதனை நடைபோட வைக்கின்றது. அவ்வகையில் இராவுத்த குமாரசாமியை வழிபடுவோர் பின்பற்றும் நம்பிக்கை, வழிபாட்டுமுறைகள் பற்றி இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. வேற்றுமையில் ஒற்றுமை என்பதற்குச் சான்றாக இத்திருக்கோவில் அமைந்துள்ளதைக் காணமுடிகிறது.

**பார்வை நூல்கள்:**

1.நாட்டுப்புற இயல் - சு.சண்முகசுந்தரம் - ப.எண் -168

2.அஞ்சூர் அருள்மிகு அழகு நாச்சியம்மன் திருக்கோயில் காணியாளர்கள் வரலாறு – மு.சின்னசாமி - ப.எண் -27